காஞ்சிபுரம் மாவட்டம்

C

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2022

## பதினொன்றாம் வகுப்பு

## கணக்குப்பதிவியல்

நேரம்: 1. 30 மணி

பதிவு எண்: | | | | | |

மதிப்பெண்கள்: 50

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 10×1=10

1. நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது
   அ) சமூகக் கணக்கியல்　　ஆ) காரியதரிசிகளின் கணக்கியல்
   இ) மேலாண்மைக் கணக்கியல்　　ஈ) பொறுப்பு கணக்கியல்
2. நிதித் தகவல்களின் அகப்பயனாளராக கருதப்படுபவர் யார்?
   அ) கடனீந்தோர்　ஆ) பணியாளர்　இ) வாடிக்கையாளர்　ஈ) அரசு
3. வணிகத்தின் உரிமையாளர் இட்ட முதலிற்கு, வணிக நிறுவனம் கடன் பட்டிருக்கிறது என்பதை கூறும் கருத்து
   அ) பணமதிப்பீட்டு கருத்து　　ஆ) அடக்கவிலை கருத்து
   இ) வணிகத்தனித்தன்மை கருத்து　　ஈ) இரட்டைத் தன்மை கருத்து
4. வணிகம் நீண்ட காலம் தொடர்ச்சியாக நடைபெறும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது
   அ) வணிக தனித்தன்மை கருத்து　ஆ) நிறுவன தொடர்ச்சி கருத்து　இ) கணக்கியல் கால அனுமானம்　ஈ) முன்னெச்சரிக்கை கொள்கை
5. ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மதிப்பு ரூ. 1,00,000 மற்றும் பொறுப்புகள் ரூ.60,000 எனில் அந்நிறுவனத்தின் முதல் ..............
   அ) ரூ. 1,60,000　ஆ) ரூ. 60,000　இ) ரூ. 1,00,000　ஈ) ரூ. 40,000
6. பின்வருவனவற்றில் பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு எது?
   அ) கட்டடம் கணக்கு　　ஆ) கொடுபட வேண்டிய சம்பள கணக்கு
   இ) மகேஷ் கணக்கு　　ஈ) பாலன் நிறுவனம்
7. ஒரு கணக்கின் வரவு மொத்தத்தை விட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள்
   அ) வரவு இருப்பு　　ஆ) பற்று இருப்பு
   இ) இருப்பு இன்மை　　ஈ) பற்று மற்றும் வரவு இருப்பு
8. உரிமையாளரால் தொழிலுக்கு கொண்டு வரப்படும் தொகைக்கு வரவு செய்யப்படுவது
   அ) ரொக்க கணக்கு　ஆ) எடுப்பு கணக்கு　இ) முதல் கணக்கு　ஈ) அனாமத்து கணக்கு
9. இருப்பாய்வு என்பது ஒரு
   அ) அறிக்கை　ஆ) கணக்கு　இ) பேரேடு　ஈ) குறிப்பேடு
10. இருப்பாய்வில் பற்றுப்பத்தியின் மொத்தமும் வரவுப்பத்தியின் மொத்தமும் வேறுபட்டால் அதை எடுத்து எழுத வேண்டிய கணக்கு
    அ) வியாபார கணக்கு ஆ) வேறுபாட்டு கணக்கு இ) அனாமத்து கணக்கு　ஈ) இதர கணக்கு

II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 17க்கு கட்டாயமாக விடையளிக்கவும்: 5×2=10

11. கணக்கியல் தகவல்களில் ஆர்வமுடைய (4) நபர்கள் யாவர்?
12. கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு.
13. கணக்கியல் கருத்துக்கள் என்றால் என்ன?
14. ஆதார ஆவணங்கள் என்றால் என்ன?
15. எடுத்தெழுதுதல் என்றால் என்ன?
16. இருப்பாய்வு என்றால் என்ன?
17. கணக்கியலை வரையறு.

III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 24க்கு கட்டாயமாக விடையளிக்கவும்: 5×3=15

18. கணக்கியலின் முக்கியத்துவத்தினை விரிவாக விளக்குக.

19. நிலைத்தன்மை மரபு குறித்து சிறு குறிப்பு வரைக.
20. இரட்டைப் பதிவு கணக்கு முறையின் விதிகள் யாவை?
21. பேரேடு என்றால் என்ன? அதன் பயன்பாடுகள் யாவை? (ஏதேனும் 2)
22. இருப்பாய்வு தயாரிப்பதன் நோக்கங்கள் யாவை?
23. பின்வருவனவற்றை ஆள்சார் கணக்கு, சொத்து கணக்கு மற்றும் பெயரளவு கணக்கு என்று வகைப்படுத்துக.

அ) முதல் ஆ) கட்டடம் இ) ரொக்கம் ஈ) உள் ஏற்றிச்செல் செலவு
உ) கொள்முதல் ஊ) சந்துரு

24. கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக:

| சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|
| அ) ரூ.1,00,000 | = | 80,000 | + | ? |
| ஆ) ரூ.2,00,000 | = | ? | + | 40,000 |
| இ) ? | = | 1,60,000 | + | 80,000 |

## IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 3×5=15

25. கணக்கியலின் பிரிவுகளை சுருக்கமாக கூறுக. **(அல்லது)**
குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக.

26. *விடுபட்ட பகுதிகளை நிரப்பு:*

| சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|
| அ) 30,000 | = | 20,000 | + | ? |
| ஆ) 60,000 | = | 25,000 | + | ? |
| இ) ? | = | 25,000 | + | 30,000 |
| ஈ) ? | = | 10,000 | + | 80,000 |
| உ) 25,000 | = | ? | + | 15,000 |
| ஊ) 40,000 | = | ? | + | 30,000 |

**(அல்லது)**

பின்வரும் இருப்புகளை கொண்டு இருப்பாய்வு தயாரிக்கவும்:

| | | | |
|---|---|---|---|
| வங்கி கடன் | 2,00,000 | கொள்முதல் | 1,80,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 1,00,000 | விற்பனை | 3,00,000 |
| சரக்கிருப்பு | 70,000 | கடனாளிகள் | 4,00,000 |
| முதல் | 2,50,000 | வங்கி | 2,00,000 |

27. பின்வரும் நடவடிக்கைகளை ஜெயசீலி என்பவரின் குறிப்பேடுகளில் பதிவு செய்க:

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 1 | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 80,000 |
| | 2 | வங்கியில் செலுத்திய ரொக்கம் | 40,000 |
| | 3 | ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது | 5,000 |
| | 4 | ஹரி என்பவரிடம் சரக்கு கடனுக்கு கொள்முதல் செய்தது | 10,000 |
| | 5 | ஜாய் என்பவரிடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 11,000 |

**(அல்லது)**

பின்வரும் நடவடிக்கைகளை ஜவுளி வியாபாரம் செய்யும் மனோகர் அவர்களின் குறிப்பேடுகளில் பதிவு செய்க:

| 2018 | | | ரூ. |
|---|---|---|---|
| மார்ச் | 1 | தொழில் ரொக்கத்துடன் தொடங்கியது | 60,000 |
| | 2 | ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | 10,000 |
| | 3 | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 25,000 |
| | 6 | ரொக்கத்திற்கு சரக்கு விற்பனை செய்தது | 28,000 |
| | 18 | வாடகை செலுத்தியது | 500 |

----------